1973 நவம்பர் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பிரச்னை குறித்து விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று கூறி, இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.*

(3) கவன ஈர்ப்பு

டாக்சி கட்டணங்கள், சென்னை நகரிலும் மாவட்டங்களிலும் உயர்ந்துள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *திரு. என். டென்னிஸ் அவர்கள் இப்போது போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவருவார்கள்.*

THIRU N. DENNIS : I wish to call the attention of the Hon. Minister for Transport to a matter of urgent public importance, namely, the increase in taxi fares in Madras City and in the districts causing inconvenience to the public.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : *தலைவர் அவர்களே, ஒப்பந்த ஊர்திகளின் கட்டணங்கள் அண்மையில் உயர்த்தப்பட்டதற்கு முன்னர், சாதாரண டாக்சிகளுக்கான கட்டணம் ஒரு கிலோ மீட்டருக்கு 50 காசு. குறைந்த அளவுக் கட்டணம் ரூ. 1. 1971-ல் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.16 ஆக இருந்த பெட்ரோலின் விலை 1—7—1973 முதல் லிட்டர் ஒன்றுக்கு ரூ. 1.62 ஆக உயர்ந்துள்ளதாலும் உதிரிப் பாகங்கள் முதலியவற்றின் விலையும் கடந்த இரண்டாண்டுகளில் உயர்ந்துள்ளதாலும் டாக்சி கட்டணங்கள் உயர்த்தப்படவேண்டும் என்று ஒப்பந்த ஊர்திகள்—டாக்சி உரிமையாளர்கள் சங்கம் சில காலமாக முறையிட்டு வந்துள்ளது. இந்த முறையீடுகள் அரசின் பரிசிலனையில் இருந்தன. இந்திய அரசு, 3—11—1973 முதல் பெட்ரோல் விலையை ரூ. 1.62 லிருந்து ரூ. 2.69 ஆக உயர்த்தியுள்ளது. டாக்சி உரிமையாளர்களுக்கு மேலும் இழப்பு ஏற்படாமல் இருப்பதற்காக டாக்சி கட்டணங்களை உடனடியாக உயர்த்துவதுபற்றி மாநில அரசு கருதிப்பார்க்கலாம் என்று இந்திய அரசு 3—11—1973 நாளிட்ட தங்களது தந்தியில் ஆலோசனை நல்கியுள்ளனர்.*

இக்கூறுகளைக் கருத்திற்கொண்டு, டாக்சி கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு கிலோ மீட்டர் ஒன்றுக்கு 80 காசாக உயர்த்தப்பட்டது. குறைந்த அளவுக் கட்டணம் ரூ. 1.50 என்றும் நிச்சயிக்கப்பட்டது. உயர்த்தப்பட்ட இக்கட்டணம் 4—11—1973 முதற்கொண்டு செயலுக்கு வந்தது. அவ்வண்ணமே, மாநில போக்குவரத்து அதிகாரமன்றத்திற்கு வரைவுக் கட்டளை ஒன்று அனுப்பப்பட்டது. இக்கட்டளை உறுதிப்படுத்தப்படும்வரையில், மேற்சொன்ன விதங்கள் 4—11—1973 முதற்கொண்டு செயலுக்குக் கொண்டுவரப்பட்டன. தற்போதைய விலை வாசியைக் கருத்தில் கொண்டு பார்த்தால், அரசு அறிவித்துள்ள விதங்கள் போதுமானவையல்ல என்று டாக்சி உரிமையாளர்கள் இப்பொழுது முறையிட்டுள்ளனர். பொது மக்களிடமிருந்து வரக்கூடிய முறையீடுகள், கருத்துரைகள் ஆகியவை கருத்தில் கொள்ளப்பட்டு, இது குறித்து முடிவு எடுக்கப்படும்.

திரு. என். டென்னிஸ் : மாநகராட்சி போன்ற பெரிய நகரங்களில் நெரிசல் நேரங்களில் சாதாரண பஸ்களைவிட சற்று ஹயர் ரேட்டோடு கூடுதலான வசதியுள்ள லக்ஸரி கோச் வசதி செய்வது இதற்கு ஒரு பரிகாரமாக இருக்கும், எனவே இதுபற்றி ஆலோசிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருப்பது ஒரு நல்ல யோசனை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், 1973-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருவார்.

4. நடைமுறைக் கேள்வி

ஓர் அவசரச் சட்டத்தை திருத்தங்களுடன் சட்ட முன்வடிவாகக் கொண்டு வருவது முறைதானா என்பது குறித்து

Dr. H. V. HANDE : Sir, I rise on a point of order. Now the Hon. Minister for Local Administration has been called by you to move a motion to seek the permission or approval of the House to introduce the Bill.